பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 15 செவ்வாய்க்கிழமை 31.08.2021 கதிர் 163

## சுகாதாரப் பணிக்குழாமினர் 6,000 பேருக்குக் கொரோனா

நாட்டில் இதுவரையில் 6 ஆயிரம் சுகாதாரப் பணிக்குழாமினருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுயாகியுள்ளது என அரச தாதியர்கள் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2

# கொரோனாவைப் பயன்படுத்தி அவசரகாலச் சட்டம் பிரகடனம்

## ஜனாதிபதியின் கைகளுக்குள் அதிகாரம்



நாடு தற்போது கொரோனாப் பெருந்தொற்றுக்குள் உள்ளாகி இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலைமையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரகடனப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து அத்தியாவசிய சேவைகள் பற்றிய பல விதிமுறைகளை பிரகடனப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் ஜனாதிபதியின் கைகளுக்கு வந்துள்ளது.

இந்த அவசரகாலச் சட்டப் பிரகடனம் ஒரு மாதத்துக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகரிக்கப்பட வேண்டும்.

2

## தொற்று, சாவு எண்ணிக்கை உச்சம்



# ஊரடங்கு தளர்வு பற்றி இன்னும் முடிவில்லை!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டத்தை செப்டெம்பர் 6ஆம் திகதி தளர்த்துவதா? அல்லது நீடிப்பதா? என்பது தொடர்பில் இன்னமும் நாம் தீர்மானிக்கவில்லை.

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா ஊடகங்களிடம் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், கொரோனா மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்ற நிலையில் ஊரடங்குச் சட்டத்தை தளர்த்துவது தொடர்பில் உடனே தீர்மானம் எடுக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதாரப் பிரிவினருடன் இது தொடர்பில் இந்த

2

## அமைச்சரவையில் ஊரடங்கு குறித்து ஆராயப்படவில்லை

### ரமேஷ் பத்திரண தகவல்



நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை எதிர்வரும் செப்டெம்பர் 06 ஆம் திகதிக்குப் பின்னரும் நீடிப்பதா அல்லது தளர்த்துவதா என்பது தொடர்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படவில்லை என்று அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

2

## கொரோனாவின் 4 அலைகளுக்கும் ராஜபக்ஷ அரசுதான் முழுப்பொறுப்பு


### சம்பிக்க எம்.பி. குற்றச்சாட்டு



நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் நான்கு அலைகள் உருவாகுவதற்கு அரசின் பொறுப்பற்ற செயற்பாடுகளே பிரதான காரணம். எனவே, போலியான முறையில் நாட்டை மூடாமல், விஞ்ஞானபூர்வமான லொக்டவுணைச் செய்யுங்கள். இல்லையேல் நிலைமை மோசமாகும்.

2

## 103 வயது மூதாட்டிக்கு கொரோனாத் தடுப்பூசி



இலங்கையில் 103 வயது மூதாட்டி ஒருவருக்கும் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான தடுப்பூசி ஏற்றும் திட்டம்

2

## தகனத்துக்கான செலவை பொறுப்பேற்ற இளைஞர்கள்





(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கொரோனாத் தொற்று காரணமாக மரணமடைபவர்களின் சடலங்களைத் தகனம் செய்வதற்கான செலவைத் தாம் வழங்குகிறோம் என ஊடகவியலாளர் ப.கார்த்தீபன் மற்றும் சேப்ரி கண் நிறுவன உரிமையாளர் ம.மயூரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக மரணிப்பவர்களின் சடலங்கள் வவுனியா நகர சபைக்குச் சொந்தமாக பூந்தோட்டத்தில் அமைந்துள்ள இலத்திரனியல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டு வருகின்றன. இதன்போது சடலம் ஒன்றுக்கு 7

2

### தனிமைப்படுத்தல் உத்தரவுகள் மீறல்;

## 62 ஆயிரத்தைத் தாண்டியது கைதானோர் எண்ணிக்கை

நாட்டில் தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் கைது

2

## அரசின் செலவைக் கட்டுப்படுத்த நிதி அமைச்சர் அதிரடி நடவடிக்கை

### அமைச்சரவையில் பல பரிந்துரைகள் முன்வைப்பு

அரசின் செலவுகளைக் கட்டுப்படுத்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளதோடு, அது தொடர்பாக அமைச்சரவைக்கும் அறிவித்துள்ளார்.

இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதைக் கருத்தில்கொண்டு நிதி அமைச்சர் இந்தத் தீர்மானத்தை

2

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



## 103 வயது மூதாட்டிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் துரித வேகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு முன்னுரிமை - முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி நிலையங்களுக்கு வரமுடியாத முதியவர்களுக்கு வீடுகளுக்கே சென்று தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் 103 வயதுடைய மூதாட்டி ஒருவருக்கும் நேற்று வீட்டுக்கே சென்று சுகாதாரத் தரப்பினரால் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. பதுளை பகுதியிலுள்ள குறித்த மூதாட்டியின் வீட்டுக்குச் சென்று சுகாதார அதிகாரிகள் தடுப்பூசியைச் செலுத்தினர்.

## 62 ஆயிரத்தைத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 62 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 498 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் 62 ஆயிரத்து 85 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, கடந்த 24 மணி நேரத்தில் 42 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள காணொலிப் பதிவிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரப் பகுதியில் மொத்தம் 498 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இதன்போது 42 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மேல் மாகாண எல்லையைக் கடக்க முற்பட்ட 316 வாகனங்களில் பயணித்த 639 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே மேல் மாகாணத்தின் 13 நுழைவாயில்களின் ஊடாக மேல் மாகாணத்தினுள் நுழைய முற்பட்ட 489 வாகனங்களில் பயணித்த 1,153 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் - என்றார்.

## அரசின் செலவைக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ளார்.

கொரோனாத் தொற்று நோய் காரணமாக அரசின் பல்வேறு வருமான வழிகளும் வீழ்ச்சியடைந்துள்ளது என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனாத் தொற்று தடுப்பு நடவடிக்கைகள், தடுப்பூசி வழங்கல், நிவாரணம் வழங்கல் போன்ற எதிர்பாராத செலவுகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது என்றும் அவர் அமைச்சரவையில் தெரிவித்துள்ளார்.

அரசு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டிருந்தாலும், ஆரம்பிக்கப்படாத திட்டங்கள், நிர்மாண பணிகளை இடைநிறுத்துவதற்கு நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரச பணியாளர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நிறைவடைந்திருந்தாலும், நியமனம் வழங்குவதை இடைநிறுத்துவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்கள பிரதானிகளின் அனுமதியின் கீழ் ஊழியர்களுக்கு சம்பளத்துக்கு மேலதிகமாக வழங்கப்படும் கொடுப்பனவுகளைத் துண்டிக்கவும், பணியில் ஈடுபடுபவர்களுக்கு மாத்திரம் கொடுப்பனவுகளை வழங்கவும் நிதி அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அரசின் செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக சேமிக்க முடியுமாகும் நிதி தொடர்பான அறிக்கை ஒன்றையும் நிதி அமைச்சர், நிதி அமைச்சின் செயலாளரிடம் கோரியுள்ளார்.

## தகனத்துக்கான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரம் ரூபா நகர சபையால் கட்டணமாக அறவிடப்படுகின்றது.

குறித்த இலத்திரனியல் மயானத்தில் தகனத்துக்கான இயந்திரத் திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்புக்காகவே குறித்த கட்டணம் அறவிடப்பட்டு வருகின்றது. இதன்காரணமாக சில குடும்பங்கள் கட்டணம் செலுத்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், வவுனியாவைச் சேர்ந்த ஊடகவியலாளர் ப.கார்த்தீபன் மற்றும் பிரபல வர்த்தகரும் சேப்ரிகண் நிறுவன உரிமையாளருமாகிய ம.மயூரன் ஆகியோர் தாமாக முன்வந்து குறித்த சடலங்களைத் தகனம் செய்வதற்குக் கட்டணம் செலுத்த முடியாதவர்கள் தொடர்புகொள்ளும் பட்சத்தில் நகர சபைக்குத் தம்மால் முழுப் பணத்தையும் செலுத்தித் தகனம் செய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுக்க உதவுவதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கொரோனா சடலங்களைத் தகனம் செய்வதற்கு நகர சபைக்குப் பணம் கட்ட முடியாதவர்கள் 0778500294 அல்லது 0773525375 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொள்வதன் மூலம் குறித்த உதவியினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர். (100)

## அமைச்சரவையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது.

இதன்போது செப்டெம்பர் 6ஆம் திகதிக்குப் பின்னரும் ஊரடங்கை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், சுகாதார தரப்பினரின் பரிந்துரைகளின் பிரகாரமே முடிவு எடுக்கப்படும் எனவும் அமைச்சர் ரமேஷ் பத்திரண மேலும் குறிப்பிட்டார்.

## கொரோனாவின் 4 ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

நாடு தற்போது எச்சரிக்கை மட்டத்திலேயே இருக்கின்றது. தொற்றாளர்களின் எண்ணிக்கையும் உச்சம் தொட்டுள்ளது. இந்நிலையில், விஞ்ஞானபூர்வமாக நாட்டை முடக்குமாறு துறைசார் நிபுணர்கள் உட்பட பல தரப்பினரும் வலியுறுத்தினர். ஆனால், நாடு முறையாக முடக்கப்படவில்லை. தமக்கு தேவையான இடங்களை அரசு திறந்தே வைத்துள்ளது. இவ்வாறு பகுதியளவு நாட்டை முடக்குவதால் உரிய பயன் கிட்டாது. தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரண எண்ணிக்கையை குறைக்க முடியாது.

நாட்டை முடக்கும் தீர்மானம் ஜூன் மாதமளவில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இழுத்தடிப்புகள் செய்யப்பட்டு இறுதி நொடியிலேயே பெயருக்கு முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டை இவ்வாறு போலியான முறையில் முடக்குவதால் உரிய பயன் கிட்டாது. பொருளாதார பாதிப்புகள் மட்டுமே ஏற்படும் என்பதை ஆளுந்தரப்பினர் புரிந்துகொள்ள வேண்டும்.

அத்துடன், தமது இயலாமையாலும், முறையற்ற முகாமைத்துவத்தாலும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு முடக்கவே காரணம் என்ற கருத்தை உருவாக்கும் முயற்சியிலும் இந்த அரசு ஈடுபட்டுள்ளது.

இந்தியா, ரஷ்யா ஆகிய நாடுகளில் தொற்று வேகமாக பரவி வருகின்றது. அங்கிருந்து சுற்றுலாப் பயணிகளை அழைத்துவந்து புதிய திரிவுகளை உருவாக்குவதற்கும் அரசு முற்படுகின்றது. எமது நாட்டு மக்களை ஆய்வுகூட எலிகளாக் குவதற்கான முயற்சியா இது?

நாம் ஆட்சியைக் கவிழ்க்க முற்படவில்லை. மாறாக சுகாதாரத்துறை நிபுணர்கள் உட்பட துறைசார் நிபுணர்களின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுமாறே அரசைக்கோரி வருகின்றோம். ஆனால், அவர்கள் எதிரணியில் இருக்கும் போது போலிகளைப் பரப்பி, ஆட்சியைக் கவிழ்க்க முற்பட்டனர்.

இந்நாட்டில் கொரோனாவின் நான்கு அலைகள் ஏற்படுவதற்கும் இந்த அரசுதான் காரணம். மரணங்களுக்கு அரசு பொறுப்பு கூறவேண்டும். தடுப்பூசிகளை வாங்க சொன்னபோது, பாணிக்கு பின்னால் ஓடிக் காலத்தை இழுத்தடித்தனர்.

டொலர் பிரச்சினையால் மீண்டும் கூப்படம், வரிசை யுகம் உருவாகும் அபாயமும் உள்ளது - என்றார்.

## ஊரடங்கு தளர்வு பற்றி ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாரம் கலந்துரையாடப்படும் எனவும், அதன்பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் இராணுவத் தளபதி மேலும் கூறினார்.

## கொரோனாவைப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி அடுத்த வாரத்தில் நாடாளுமன்றம் கூடும்போது இந்த அவசரகாலச் சட்டப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும் எனத் தெரிகின்றது.

தேவைப்படின் மாதத்துக்கு ஒரு தடவை இத்தகைய பிரேரணை மூலம் அவசரகால நிலைமை நீடிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுகாதாரப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் கண்டி வைத்தியசாலையில் மாத்திரம் 250 சுகாதாரப் பணியாளர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (மற்றொரு செய்தி 03ஆம் பக்கத்தில்)


**வேலைவாய்ப்பு**

**சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.**
**தொடர்புகளுக்கு -**
**076 740 3814**

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com




காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசுக்கு சுருக்கு!

பொருளாதார நெருக்கடியில் சுருண்டு கிடக்கும் இலங்கைக்கு தொடர்ந்து கிட்டி வரும் அனுபவம் மேலும் மேலும் நெருக்கடி தருவதாகவே இருக்கின்றது. ஏற்பட்டுள்ள பொருளாதார இக்கட்டை எதிர்கொள்வதற்காக பிணைமுறி மூலம் உள்நாட்டில் நிதி திரட்ட அரசு – மத்திய வங்கி – எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை. பிணைமுறிகளுக்கான வட்டி வீதத்தைக் கடைசி நேரத்தில் கூட்டி அறிவித்து, அரசு விடுத்த ஆசை காட்டலுக்கும் பெரும் சாதக பிரதிபலிப்பு ஏதும் கிட்டவில்லை என்கின்றன மத்திய வங்கி வட்டாரங்கள்.

2025 இலும், 2023 இலும் முதிர்வடையக் கூடியவையாக ஐயாயிரம் கோடி ரூபா பிணைமுறிக்கு ஏலம் விடப்பட்ட போதிலும் – கடைசி நேரத்தில் முறையே 8.55 மற்றும் 6.75 வீதத்துக்கு வட்டியை உயர்த்திக் காட்டிய போதும் – மொத்த எதிர்பார்ப்பில் 92 வீதமான பிணைமுறி விற்பனையேயாகவில்லை என்கின்றன சம்பந்தப்பட்ட வட்டாரங்கள்.

2023 முதிர்வு பிணைமுறி மூலம் மூவாயிரம் கோடி ரூபாவும், 2025 முடிவு பிணைமுறி மூலம் இரண்டாயிரம் கோடி ரூபாவும் பெறுவதற்கு அரசு முயற்சித்தது. ஆனால் ஏலம் எடுக்கப்பட்ட தொகை முறையே 80 கோடி ரூபாவும், 320 கோடி ரூபாவும்தான். ஏலத்துக்கு விடப்பட்ட ஐயாயிரம் கோடி ரூபாவில் ஏலத்தில் எடுக்கப்பட்டதோ ஆக 400 கோடி ரூபாதான். அவ்வளவுதான்.

பிணைமுறி மூலம் எதிர்பார்க்கப்பட்ட நிதியை உள்ளூரில் திரட்ட முடியாத அரசுக்கு உள்ளூர் நிதிக் கடப்பாடுகளை நிறைவு செய்ய இனிமேல் ஒரு வழிதான் உண்டு. எஞ்சிய தொகை பண நோட்டுக்களை கண்மூடித்தனமாக அச்சிட்டுத் தள்ளி அந்தப் பண நோட்டுகள் மூலம் கொடுப்பனவுகளைச் செலுத்துவதுதான். அதுவே கனகச்சிதமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாக தகவல்.

இப்படிக் கண்மூடித்தனமாக நோட்டுகளை அச்சிட்டு, அதன் மூலம் தனது கொடுப்பனவுக் கடப்பாடுகளை அரசு நிறைவு செய்ய முயல்வது மிக ஆபத்தான பொருளாதாரக் கொள்கைப் போக்காகும். இதனால் பணத்தின் பெறுமதி வீழும். விலைவாசி உயரும். பணவீக்கம் மோசமான கட்டத்தை அடையும். சுழற்சியில் – புழக்கத்தில் – உள்ள பணத்தின் தொகையைக் கட்டுப்படுத்த முடியாமல் நெருக்கடி ஏற்படும். வைப்புகளை வங்கிகள் ஏற்க முடியாத கட்டம் கூட உருவாகும்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் தனது 'கடன் வாங்கிக் கல்யாணம்' என்ற திருவிழாவை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றது அரசு. பொருளாதார நெருக்கடிகள் முற்ற, அரசு ஒரு நாள் முகம் குப்புற விழ வேண்டி நேரும். அத்தகைய இக்கட்டு விரைந்து வந்து கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

வேறு வழியின்றிக் கடைசியாக சர்வதேச நாணய நிதியத்தின் காலில் போய் விழும் கட்டாயம் கோட்டாபய அரசுக்கு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆனாலும், திமிர் பிடித்த – பௌத்த, சிங்கள இனவெறிப் போக்கில் தீவிரம் கொண்ட – இராணுவப் பாணி நடைமுறையை பின்பற்றுகின்ற – இந்த அரசு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுமா என்பதுதான் கேள்வி.

அரசு நிர்வாகத்தில் இராணுவமயப்படுத்தலை முதலில் ஒரேயடியாகக் குறையுங்கள் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் முதல் நிபந்தனை என்கிறார்கள். அதுவே கோட்டா நிர்வாகத்துக்கு ஆப்படித்த மாதிரிதான். என்ன செய்யப்போகிறது கோட்டா நிர்வாகம்?

# சமூகப் பரவலாக கொவிட் மாற்றம்!

## விசேட வைத்தியர்கள் சங்கம் தெரிவிப்பு

நாட்டில் கொவிட் வைரஸ் சமூகப் பரவலாக ஏற்கனவே மாற்றமடைந்து விட்டதாக விசேட வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர், விசேட வைத்தியர் அசோக்க குணரட்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொவிட் வைரஸ் சமூகப் பரவலாக மாற்றம் பெறவில்லை என சிலர் கூறுகின்றனர். எனினும், நோயாளர்கள் ஆங்காங்கே அடையாளம் காணப்படும் நிலையில், அது சமூகப் பரவலாகவே கருத முடியும் என்பது அனைத்து விசேட வைத்தியர்களின் நிலைப்பாடாகும்.

இதேவேளை, தடுப்பூசிகள் வழங்குவதில் இராணுவத்துக்கு முழு அதிகாரம் வழங்கும் செயற்பாட்டுக்கு தாம் கடுமையான எதிர்ப்பை வெளியிடுகிறோம் எனவும் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

# வைத்தியசாலைகளுக்கு போதியளவு தடுப்பூசிகள் வழங்கப்படவில்லையாம்?

வைத்தியசாலைகளுக்கு போதியளவு தடுப்பூசிகள் வழங்கப்படுவதில்லை என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மருத்துவ சுகாதார அதிகாரிகள் மற்றும் வைத்தியசாலைகளுக்கு கொவிட் தடுப்பூசிகள் போதுமான அளவில் வழங்கப்படவில்லை என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுக் குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலபகே தெரிவித்துள்ளார்.

கொவிட் தடுப்பூசிகள் அதிகளவில் இராணுவத்துக்கு வழங்கப்படுவதாகவும், வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படுவதில்லை எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


வைத்தியசாலைகளில் கொவிட் தடுப்பூசிகளுக்கு பாரியளவில் தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி விநியோகம் செய்யும் பொறுப்பு சுகாதார அமைச்சு அல்லது தொற்று நோய் தடுப்பு பிரிவு ஆகியனவற்றில் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

60 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றி முடியும் வரையில் மரணங்களை கட்டுப்படுத்த முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள், நாள்பட்ட நோயுடையவர்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு முதலில் தடுப்பூசி ஏற்றப்பட வேண்டுமென தமது சங்கம் அரசாங்கத்துக்கு பரிந்துரை செய்திருந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக சுகாதார அமைச்சு கவனம் செலுத்தும் என கருதுவதாகத் தெரிவித்துள்ளார். 30 முதல் 60 வயது வரையிலானவர்களுக்கு திட்டமிட்ட அடிப்படையில் கிரமமாக தடுப்பூசி ஏற்றப்பட வேண்டுமென வைத்தியர் பிரசாத் கொலபகே தெரிவித்துள்ளார்.

# சுகாதாரத்துறையில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் கொரோனாத் தொற்றால் பாதிப்பு



இலங்கையின், சுகாதாரத்துறையில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் கொவிட் வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அரச தாதியர்கள் சங்கத்தலைவர் சமன் ரத்னப்ரிய தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர், கண்டி தேசிய வைத்தியசாலையில் மட்டும் சுமார் 250 சுகாதார ஊழியர்கள் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில், கொவிட் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இத்தகைய பின்னணியில், ஏனைய நோய்களுக்காக வைத்தியசாலைகளுக்குச் செல்ல பயப்பட வேண்டாம் என்று மருத்துவர்கள், பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

# வெளிநோயாளர் சிகிச்சை பிரிவுக்கு வந்த 39 பேருக்கு கொவிட் தொற்று

## காலி கராப்பிட்டியவில் அதிர்ச்சி

காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்காக நேற்று திங்கட்கிழமை வந்த 39 பேருக்கு கொவிட் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பிரிவுக்கு சிகிச்சைக்காக வந்த 194 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 39 பேருக்குக் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கராப்பிட்டிய வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் செல்ட்டன் பெரேரா ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். மேலும் 46 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 24 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொற்றுக்குள்ளானவர்களில் வைத்தியசாலையின் ஊழியர்கள் இருவரும் உள்ளடங்குகின்றனர் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# சட்டவிரோத வேட்டைத் துப்பாக்கியுடன் ஐயன்கன் குளத்தில் ஒருவர் கைதானார்

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்துக்கு உட்பட்ட ஐயன்கன்குளம் பகுதியில் சட்டவிரோத வேட்டைத் துப்பாக்கி வைத்திருந்த நபர் ஒருவரை நேற்று திங்கட்கிழமை கைது செய்துள்ளோம் என எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஐயன்கன் குளம் ஆரோக்கிய புரம் கிராமம் 8 ஆம் கட்டைப் பகுதியில் வசிக்கும் நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் ஐயன்கன்குளம் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# வெளியேறியது அமெரிக்கா தலிபான்கள் குதூகலம்...!



ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா இன்று முழுமையாக வெளியேறியுள்ள நிலையில் இதனை, வாண வேடிக்கையுடனும் வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தும் தலிபான்கள் கொண்டாடி வருகின்றனர்.

20 வருட கால ஆக்கிரமிப்புக்குப் பின்னர் அமெரிக்கா வெளியேற்றப்பட்டதன் மூலம் ஆப்கானிஸ்தானுக்கு 'முழு சுதந்திரம்' கிடைத்துள்ளதாக தலிபான்கள் அறிவித்தனர். அமெரிக்கா முழுமையாக வெளியேறியதன் மூலம் எங்கள் நாடு முழுமையாக சுதந்திரம் பெற்றுள்ளது என தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் இன்று செவ்வாய்க்கிழமை காலை தெரிவித்தார்.

கடைசி அமெரிக்க விமானம் இன்று அதிகாலை வானில் எழுந்து மறைந்து சென்றதை அடுத்து தலிபான் போராளிகள் வானத்தை நோக்கி துப்பாக்கிகளால் சுட்டு, கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், வாண வேடிக்கைகளையும் அவர்கள் நிகழ்த்தினர். ஆப்கானிஸ்தானில் சுமார் 20 வருடங்களாக நிலை கொண்டிருந்த அமெரிக்கப் படைகள் இன்று செவ்வாய்க்கிழமை அங்கிருந்து முற்றாக வெளியேறின.

இலங்கை நேரப்படி இன்று அதிகாலை அமெரிக்கப் படைகளின் இறுதி விமானம் காபூல் ஹமீத் கர்சாய் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆப்கானிஸ்தானை விட்டு அமெரிக்கா உள்ளிட்ட அனைத்து வெளிநாட்டுப் படைகளும் வெளியேறிவிட வேண்டும். இல்லையேல் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என தலிபான்கள் எச்சரித்திருந்த நிலையில் அவசர அவசரமாக மீட்புப் பணிகளை முடித்துக்கொண்டு அமெரிக்கா முழுமையாக இன்று ஆப்கானில் இருந்து வெளியேறியது. இதன்மூலம் ஆப்கானிஸ்தானில் 20 வருடங்களுக்கு மேலாக நீடித்த அமெரிக்காவின் ஆதிக்கம் முடிவுக்கு வந்துள்ளது.



# அணு உலையை மீண்டும் ஆரம்பித்தது வடகொரியா

## ஐ.நா. தகவல்!

வடகொரியா தனது யோங்பியோன் அணு உலையை மீண்டும் தொடங்கியுள்ளதாக, ஐ.நா. அணு நிறுவனம் தெரிவித்துள்ளது. அணு ஆயுதங்களுக்குப் பயன்படுத்தப்படும் புளூட்டோனியம், இந்த அணு உலையின் வளாகத்தில் உற்பத்தி செய்யப்படுவதாக நம்பப்படுகிறது. சர்வதேச அணு சக்தி நிறுவனம் 2009இல் பியோங்யாங்கால் வெளியேற்றப்பட்டது.

ஆனால் மதிப்பீடுகளைச் செய்வதற்கு செயற்கைக்கோள் படங்களை நம்பியுள்ளது. அணு உலை ஜூலை மாதத்திலிருந்து குளிர்ச்சியான நீரை வெளியேற்றுவதாக கண்காணிப்புக் குழு கூறியது. அது செயற்பாட்டைக் குறிக்கிறது.

5 மெகாவாட் உலை கொண்ட அணுசக்தி வளாகமான யோங்பியோன், வட கொரியாவின் அணு திட்டத்தின் மையத்தில் உள்ளது. சர்வதேச அணுசக்தி நிறுவன தரவு படி, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சிங்கப்பூரில் கிம் ஜோங் உன்னைச் சந்தித்த சில மாதங்களுக்குப் பிறகு, டிசெம்பர் 2018ஆம் ஆண்டுக்குப் பிறகு இது அணு உலையில் செயற்பாட்டு நடவடிக்கையின் முதல் அறிகுறியாகும்.

# பிரித்தானியாவும் வெளியேறியது

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டு கால நடவடிக்கையை முடித்துக் கொண்டு, அந்த நாட்டிலிருந்து பிரித்தானியப் படையினர் முழுமையாக வெளியேறினர்.

ஆப்கானிஸ்தானில் இருந்த கடைசி வீரர்களையும் ஏற்றிக்கொண்டு காபூல் விமான நிலையத்திலிருந்து கடந்த சனிக்கிழமை இரவு புறப்பட்ட பிரித் தானியா விமானப் படை விமானம், ஒக்ஸ்போர்ட்டா நகரிலுள்ள விமானப் படைதளத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை வந்தடைந்தது. இந்த விமானத்தில், ஆப்கானிஸ் தானுக்கான தூதர் சர் லாரி பிரிஸ்டோவும் இருந்தார். இதுகுறித்து பிரதமர் போரிஸ் ஜோன்ஸன் வெளியிட்டுள்ள காணொலி அறிக்கையில், 'வாழ்நாளில் இதுவரை கண்டிராத, சிரமம் நிறைந்த வெளியேற்றப் பணிகள் கடும் நெருக்கடிக்கிடையே முடிவுக்கு வந்தன' எனக் கூறினார்.

கடந்த ஓகஸ்ட் 14ஆம் திகதி முதல் பிரித்தானியாவால், சுமார் 2,200 குழந்தைகள் உட்பட 15,000க்கும் அதிகமான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பிரித்தானியாவின் அரசாங்கத்தில் பணிபுரிந்தவர்கள் உட்பட சுமார் 800 முதல் 1,100 தகுதியான ஆப்கானியர்கள் மற்றும் 100 முதல் 150 பிரித்தானியா நாட்டவர்கள் வெளியேறியுள்ளனர். ஏர்லிஃப்ட் செயற்பாட்டின் உச்சத்தில் 1,000க்கும் மேற்பட்ட பிரித்தானிய சேவை வீரர்கள் காபூலில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்து பெண் சாவு பைஸர் தடுப்பூசி காரணமா?



பைஸர் கொவிட் தடுப்பூசியுடன் தொடர்புடையதாக நம்பப்படும், இறப்பு நியூசிலாந்தில் பதிவாகியுள்ளது. ஒரு சுயாதீன தடுப்பூசி பாதுகாப்பு கண்காணிப்பு சபை, தடுப்பூசியின் அரிய பக்கவிளைவாக, மாரடைப்பு அல்லது இதயத் தசையின் வீக்கம் காரணமாக அநேகமாக இந்தப் பெண்ணின் மரணம் நிகழ்ந்திருக்கலாம் என கூறப்படுகிறது.

தடுப்பூசியைத் தொடர்ந்து பிற மருத்துவப் பிரச்சினைகள் இருப்பதையும் தடுப்பூசி பாதுகாப்பு கண்காணிப்பு சபை குறிப்பிட்டுள்ளது. எனினும், மரணத்திற்கான அதிகாரப்பூர்வ காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. இருப்பினும், கொவிட் -19 தடுப்பூசி சுயாதீன பாதுகாப்பு கண்காணிப்பு சபை, மாரடைப்பு ஒருவேளை தடுப்பூசி காரணமாக இருக்கலாம் என்று கூறியது.

நியூசிலாந்தில் பைஸர் கொவிட் தடுப்பூசியுடன் இணைக்கப்பட்ட முதல் மரணம் இதுவாகும்.

# அயர்லாந்தில் அதிகரித்த தொற்று 3லட்சத்து 50ஆயிரம் பேர் பாதிப்பு!



அயர்லாந்தில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) பெருந்தொற்றினால், மொத்தமாக மூன்று லட்சத்து 50ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். உத்தியோகபூர்வ தரவுகளின் படி, அயர்லாந்தில் மூன்று லட்சத்து 51ஆயிரத்து 65பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகளவில் கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப்பினை எதிர்கொண்ட 67ஆவது நாடாக விளங்கும் அயர்லாந்தில் இதுவரை ஐந்தாயிரத்து 92பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றினால், ஆயிரத்து 292பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போதுவரை வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட 50ஆயிரத்து 89பேர் அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 61பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. அத்துடன் இதுவரை வைரஸ் தொற்றிலிருந்து இரண்டு லட்சத்து 95ஆயிரத்து 884பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.





# சிறுவயதினருக்கான கோவோவக்ஸ் கோவிட் தடுப்பூசி பரிசோதனையின் அடுத்தகட்டம் விரைவில் ஆரம்பம்!




இந்தியாவில் கொரோனாவுக்கு எதிரான கோவோவக்ஸ் தடுப்பூசியின் இரண்டாவது, மூன்றாவது கட்டப் பரிசோதனை நடைபெறவுள்ளதாகவும் இந்தத் தடுப்பூசி 920 சிறுவர்களுக்குச் செலுத்தி பரிசோதிக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவில் நோவோவக்ஸ் நிறுவனத்தார் சிறுவயதினருக்கான கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசியை நோவோவேக்ஸ் என்ற பெயரில் உருவாக்கியுள்ளனர். இந்தத் தடுப்பூசியை இந்தியாவில் கோவோவக்ஸ் என்ற பெயரில் தயாரித்து வழங்குவதற்கு கொவிஷீல்ட் தடுப்பூசியை இந்தியாவில் தயாரித்துவரும் புனேயில் உள்ள சீரம் நிறுவனத்துடன் நோவோவக்ஸ் நிறுவனத்தார் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர்.

கோவோவக்ஸ் தடுப்பூசியின் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்ட மருத்துவப் பரிசோதனையை நடத்துவதற்கு இந்திய சீரம் நிறுவனத்துக்கு இந்தியதலைமைமருந்துக்கட்டுப்பாட்டுத் தலைமை இயக்குநர் கடந்த மாதம் ஒப்புதல் அளித்தார்.

இதையடுத்து இந்தத் தடுப்பூசியை 2 வயது முதல் 17 வயது வரையிலான சிறுவர்களுக்குச் செலுத்திப் பரிசோதிக்கவுள்ளனர். இந்தப் பரிசோதனை நாடு முழுவதும் 12 நகரங்களில் நடக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக 920 சிறுவர்களை, 2-11 வயது பிரிவிலும், 12-17 வயது பிரிவிலும் தலா 460 குழந்தைகள் வீதம் தேர்வு செய்யப்படுகிறார்கள். இதற்காக தன்னார்வலர்களது குழந்தைகளைத் தேர்வு செய்வது டெல்லி ஹாம்டர்ட் மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் ஜைடஸ் கடிலா என்ற நிறுவனத்தார் ஸைகோவ்-டி என்ற தடுப்பூசியை உருவாக்கியுள்ளனர். இந்தத் தடுப்பூசியையும் குழந்தைகளுக்கு செலுத்த முடியும். இந்தத் தடுப்பூசியின் அவசரப் பயன்பாட்டுக்கு ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்டது. இதுவே இந்தியாவில் சிறு வயதினருக்கெனப் பயன்பாட்டுக்கு வருகிற முதல் கொரோனாத் தடுப்பூசியாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.




## கொரோனா மூன்றாவது அலை ஒக்டோபர் - நவம்பரில் உச்சம் அடையலாம் என ஐ.ஐ.டி. ஆய்வாளர்கள் கணிப்பு

இந்தியாவில் கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலை ஒக்டோபர், நவம்பரில் உச்சம் அடையும் என்று ஐ.ஐ.டி. கான்பூர் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித் துள்ளனர்.

அதேவேளையில், இரண்டாவது அலையைப்போல கடும் பாதிப்பை அது ஏற்படுத்தாது என்றும், இரண்டாவது அலையில் ஏற்பட்ட பாதிப்பில் நான்கில் ஒரு பங்குதான் இருக்கும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஐ.ஐ.டி.-கான்பூர் ஆராய்ச்சியாளர்கள் மூன்று பேர் கொண்ட குழுவில் அங்கம் வகித்த மகிந்திரா அகர்வால் இதுகுறித்துக் கூறுகையில், ஒரு வேளை, புதிதாக அதிதீவிர கொரோனா உருமாற்றமடையா விட்டால், நிலைமை மோசமடைய வாய்ப்பில்லை.

நாட்டில் கொரோனா மூன்றாம் அலை உருவானாலும் அதிகபட்சமாக ஒரு நாளைக்கு ஒரு லட்சம் பேருக்குத் தொற்று உறுதியாகலாம். இரண்டாம் அலை போல அதிகபட்சமாக 4 லட்சம் பேர் வரை கொரோனாத் தொற்றுப் பரவியது போன்று நேரிடாது என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள சூழலால் இந்தியா எச்சரிக்கையாகவே உள்ளதாம்



ஆப்கானிஸ்தானில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றம் இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பான புதிய கேள்விகளை எழுப்பியுள்ளதாக மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளாக முகாமிட்டிருந்த அமெரிக்கப் படைகள் நாளையுடன் (இன்று) முழுமையாக வெளியேறுகின்றன. இதற்குப் பின் ஏற்பட வாய்ப்புள்ள சூழல்கள் குறித்து பிரிட்டன், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளுடன் அமெரிக்கா ஆலோசனை நடத்தள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், சண்டிகரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் காணொலி முறையில் பங்கேற்று உரையாற்றிய இந்தியாவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ஆப்கானிஸ்தானில் நிலைமை மாறியுள்ளதால் இந்தியா எச்சரிக்கையாகவே இருப்பதாகவும், எப்படிப்பட்ட சூழலையும் சந்திக்க தயார் நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தார். ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள சூழலை பயன்படுத்தி இந்தியாவில் பயங்கரவாதத்தை தூண்டிவிடும் செயல்களை அனுமதிக்க மாட்டோம் என்றும் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

## பெண் பத்திரிகையாளர் மீதான முகநூல் அவதூறு; சேகர் வழக்கை ரத்துச் செய்ய நீதிமன்றம் மறுப்பு



பெண் பத்திரிகையாளர்கள் பணிபுரிவது குறித்து தரக்குறைவான கருத்தைப் பகிர்ந்தமை தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ரத்துச் செய்யக்கோரி எஸ்.வி.சேகர் தொடர்ந்த வழக்கினை சென்னை உயர்நீதிமன்றின் மதுரைக்கிளை ஒரு வாரத்திற்கு ஒத்தி வைத்தது.

பெண் பத்திரிகையாளர்கள் பணிபுரிவது குறித்த தரக்குறைவான கருத்தை நடிகரும், பா.ஜ.க. பிரமுகருமான எஸ்.வி.சேகர் 2018 ஆம் ஆண்டு தனது முகநூல் பக்கத்தில் பகிர்ந்திருந்தார். இதைத் தொடர்ந்து அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி பலர் புகார் அளித்திருந்தனர். அதனடிப்படையில் இந்திய தண்டனைச் சட்டத்தின் 3 பிரிவுகள் மற்றும் பெண்கள் மீதான கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் ஒரு பிரிவு என மொத்தம் 4 பிரிவுகளின் கீழ் அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

அதையடுத்து தனக்கெதிரான வழக்கை ரத்துச் செய்யக்கோரி எஸ்.வி.சேகர் சென்னை உயர் நீதிமன்றின் மதுரைக்கிளையில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு நீதிபதி நிஷாபானு முன்பாக விசாரணைக்கு வந்தபோது எஸ்.வி.சேகர் தரப்பில், அந்தப் பதிவைப் படிக்காமல் பகிர்ந்துவிட்டதாகவும், அதற்காக மன்னிப்புக் கோருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதற்கு நீதிபதி, படிக்காமல் ஏன் பகிர்ந்தீர்கள்? அவ்வாறு பகிர்ந்துவிட்டு, மன்னிப்புக் கேட்டால் சரியாகிவிடுமா? என கேள்வி எழுப்பினார். மனுதாரர் தரப்பினால் அந்த வழக்கை ரத்துச் செய்யுமாறு கோரப்பட்டபோது, வழக்கை ரத்துச் செய்ய முடியாது எனக் குறிப்பிட்ட நீதிபதி, உரிய பதிலளிக்க அவகாசமளித்து, ஒரு வாரத்திற்கு வழக்கை ஒத்திவைத்து உத்தரவிட்டார்.



## தமிழகத்தில் நாளை தொடக்கம் பாடசாலைகள் திறக்கப்படுகின்றன

தமிழ்நாட்டில் கூடுதல் தளர்வுகள் நடைமுறையில் உள்ள நிலையில், கொரோனாப் பாதிப்பு கட்டுக்குள் இருந்து வருகிறது. இதன் காரணமாக, நாளை முதல் 9 - 12 வகுப்புகளுக்கான பாடசாலைகளும் அனைத்துத் தரப்பு மாணவர்களுக்குமான கல்லூரிகளும் திறக்கப்படவுள்ளன.

இந்தச் சூழலில், மருத்துவத் துறை, வருவாய்த் துறை மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நேற்று ஆலோசனை நடத்தினார். அந்த ஆலோசனையின் முடிவில் தமிழக அரசு சார்பில் எடுக்கப்பட்ட முடிவுகள் வெளியாகியுள்ளன.

அதன்படி, தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு செப்டெம்பர் 15 ஆம் திகதி வரை நீடிக்கிறது. வெள்ளி, சனி, ஞாயிறுகளில் வழிபாட்டுத் தலங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடை தொடர்கிறது.

ஞாயிற்றுக்கிழமைகளில் கடற்கரைகளில் பொதுமக்கள் வரவுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. கல்லூரி மாணவர்களுக்கான அரசு விடுதிகள், தனியார் விடுதிகள் இயங்க அனுமதி அளிக்கப்படுகிறது உள்ளிட்ட விடயங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மத சார்பான ஊர்வலங்கள் மற்றும் திருவிழாக்களுக்கான தடை தொடர்வதாகவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# வெளிநாட்டுத் தலையீட்டினூடாகவே இங்கே நிலையான தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன் தெரிவிப்பு



கடந்த காலங்களிலே தமிழ் மக்களை ஏமாற்றிய விடயங்களை தற்போது ஐ.நா.சபை அறிந்துள்ளது. எனவே எதிர் காலத்தில் ஐ.நா.சபை அல்லது வெளி நாட்டுத் தலையீட்டினூடாகத் தான் இந்த நாட்டில் நிலையான தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று(நேற்று) உலகலாவிய ரீதியில் காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இலங்கை நாட்டைப் பொறுத்தவரையில் நீண்ட காலமாக தமிழ் மக்கள் மத்தியிலே இருக்கின்ற பாரிய பிரச்சினையாக இது இருக்கின்றது. இதே அரசாங்கத்தினால் 2009 ஆம் ஆண்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் தொடர்பில் இற்றை வரைக்குமாக எந்தவிதமான முன்னேற்றகரமான செயற் றாடுகளையும் இந்த அரசாங்கம் முன்னெடுக்கவில்லை.

இலங்கையில் வாழுகின்ற தமிழர்களை நாடு சுதந்திரம் அடைந்த கையோடு எவ்வாறு ஏமாற்றி வந்தார்களோ அதே பாணியில் இன்று சர்வதேசத்தையும் ஏமாற்றக் கூடிய வகையிலே அவர்களது செயற்பாடுகள் இருக்கின்றது. ஏனெனில் ஐ.நா. சபையிலே இந்த நாட்டிலே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்ட பல விடயங்கள் கூட முன்னெடுக்கப்பட வில்லை. தமிழ் மக்கள் சார்ந்த விடயங்கள் கூட இதய சுத்தியுடன் இந்த அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்பதுதான் உண்மையான வெளிப்பாடு.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமாக நீண்ட காலமாக அவர்களின் உறவுகளின் அமைப்பு முன்னெடுத்து வருகின்றது. ஆனால் அதிலே முன்னேற்றகரமான செயற்பாடுகள் எதுவும் நடைபெற வில்லை. எதிர்வருகின்ற மாதங்களில் ஐ.நா. சபை கூட இருக்கின்றது. அதற்கு முன்ன தாக ஏதாவது சில பணிகளை தாங்கள் முன்னெடுத்திருக்கின்றோம் என்று ஐ.நா .சபையில் காண்பிப்பதற்காகவே வடக்கில் காரியாலயமொன்றினை உருவாக்கியிருக்கின்றார்கள். இது வெறுமனே கண்துடைப்பான ஒரு விடயமாகும்.

ஏனெனில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இந்த நாட்டின் அமைச்சர்கள் கூட அவர்கள் காணாமல் ஆக்கப்படவில்லை வெளிநாடுகளில் வசிக்கின்றார்கள் போன்ற பொறுப்பற்றவிதமாகவே கருத்துக்களை வெளியிட்டிருந்தார்கள். இந்த அரசாங்கம் எங்கள் மீது அக்கறையற்ற ஒரு சிந்தனையில் தொடர்ச்சியாக எங்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இது உண்மையிலேயே ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமல்ல.

எனவே மேற்கூறிய கருத்துக்களின் அடிப்படையிலும் நீண்ட காலமாகத் தமிழ் மக்கள் இந்த நாட்டில் அனுபவிக்கின்ற துன்ப துயரங்களின் அடிப்படையிலும் எங்களுக்கு ஒரு நிலையான அரசியற் தீர்வு கிடைக்க வேண்டியது இந்த காலத்தின் கடப்பாடாக இருந்து வருகின்றது. தற்போதைய நிலையில் தமிழ் மக்களாகிய நாங்கள் ஒன்றுபட்ட சக்தியாக திகழ்ந்து எமது மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு நிலையான தீர்வினைப் பெறுகின்ற வழியிலே பயணிக்க வேண்டிய கடப்பாடு இருக்கின்றது. அந்த அடிப்படையில் நாங்கள் செயற்பட வேண்டும்.

கட்சி ரீதியாகவும் நாங்கள் அவ்வாறான செயற்பாடுகளையே முன்னெடுத்து வருகின்றோம். எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீண்டகாலமாக ஐ.நா. சபையில் தமிழ் மக்கள் சார்ந்த பல விடயங்களை முன்னெடுத்து தற்போது ஏதொவொரு வகையில் அவ்விடயங்கள் கையாளப்பட்டு முன்னேற்றகரமான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த காலங்களிலே தமிழ் மக்களை ஏமாற்றிய விடயங்களை தற்போது ஐநா சபை அறிந்துள்ளது. எனவே எதிர்காலத்தில் ஐ.நா. சபை அல்லது வெளிநாட்டுத் தலையீட்டினூடாகத் தான் இந்த நாட்டில் நிலையான தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். எமது காணாமல் ஆக்கப்பட்டோருக்கான உரிய தீர்வை பெறுவதற்காக எமது விடயங்களைக் கையாளும் புலம்பெயர் அமைப்புகளும் அக்கறையுடன் செயற்படுகின்றன. அந்த அடிப்படைகளில் தான் ஒரு தீர்வு நிறைவேற்றப்பட வேண்டும்.

அவ்வாறானதொரு நிலையான தீர்வு எமது மக்களுக்குக் கிடைக்கவில்லை என்ற ஒரு நிலைமை இருக்குமானால் இந்த நாட்டிலே தமிழர்கள் வாழ்ந்ததற்கான எந்தவொரு அடையாளங்களும் இல்லாத ஒரு நிலைமையே ஏற்படும். ஏனெனில் தற்போதைய அரசாங்கம் ஆட்சியேறியதில் இருந்து வடக்கு கிழக்கிலே அவர்கள் கையாளுகின்ற விடயங்கள் ஒவ்வொன்றும் தமிழர்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்குகின்றதாகவே அமைகின்றன. கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட விடயங்களுக்குரிய தீர்வு இல்லாமல் புதிய புதிய விடயங்களை முன்னெடுத்து எம்மைப் பலவீனப்படுத்துகின்ற அல்லது எமது பிரதேசங்களில் இருந்து வெளியேற்றக் கூடிய வகையிலே கடந்த காலங்களில் ஆயுத ரீதியான அடக்குமுறையைச் செய்தவர்கள் தற்போது நிருவாக ரீதியான அடக்குமுறையைச் செய்கின்றார்கள்.

இந்த விடயங்களை அரசோடு இணைந்து பயணிக்கின்ற அரசியல்வாதிகள் அறிந்து இந்த மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் செயற்பட வேண்டும். தங்கள் சுயநலத்திற்காக தற்போது அரசுடன் இணைந்து பயணித்தாலும் தாங்கள் தாமாகவே உணர்ந்து அரசில் இருந்து ஒதுங்கி எமது தமிழ் மக்களின் இருப்புகளைப் பாதுகாக்கின்ற விடயத்தில் எம்முடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

## திருகோணமலை திட்டமிடல் பணிப்பாளர்கள் இருவருக்கு பதவியுயர்வுடனான இடமாற்றம்



திருகோணமலை மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றிய கே.பரமேஸ்வரன் மற்றும் பிரதி திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றிய கே.சிவதாசன் ஆகிய இருவருக்கும் பதவியுயர்வுடனான இடமாற்றம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதனை முன்னிட்டு அவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று மாவட்ட செயலக உத்தியோகத்தர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டி கோராளவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இருவருக்கும் நினைவுச் சின்னமும் நினைவுப்பரிசில்களும் அரசாங்க அதிபர் தலைமையிலான உத்தியோகத்தர்களால் வழங்கிவைக்கப் பட்டது.

1994 ஆம் ஆண்டு இலங்கை திட்டமிடல் சேவைக்கான திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட இவ்விரு உத்தியோகத்தர்களும் 27 வருடங்கள் அர்ப்பணிப்புடனான சேவையை மாவட்ட மக்களுக்காக வழங்கியுள்ளனர்.

கே.பரமேஸ்வரன் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை அமைச்சின் பணிப்பாளர் நாயகமாகவும் கே.சிவதாசன் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் நாயகமாகவும் கடமைளை பொறுப்பேற்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், பிரதம கணக்காளர் எஸ்.பரமேஸ்வரன், பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் சக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.




## கொரோனா தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பதாகை திறப்பு

அக்கரைப்பற்று பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் கொரோனா பெரும் தொற்று தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பதாகைகள் காட்சிப் படுத்தும் செயற்திட்டம் நேற்று திங்கட்கிழமை காலை அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ. றாசீக் தலைமையில் பள்ளிக்குடியிருப்பு ஜும்ஆ பள்ளிவாசல் முன்பாக முதல் பதாகை நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. நாட்டில் தற்போது பரவலாக அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருக்கும் கொவிட் 19 பெரும் தொற்று குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் குறித்த பதாகைகள் பிரதேச சபை எல்லைக்குள் 5 வட்டாரங்களிலும் பல இடங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மாடு மேய்க்கச் சென்றவர் சடலமாக மீட்பு

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துரைவந்தியமேடு கிராமத்தில் மாடு மேய்க்கச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் மட்டக்களப்பு மண்டூர் பிரதேசத்தைச் சேர்ந்த செல்லத்துரை கிருஷ்ணமூர்த்தி 55 வயது மதிக்கத்தக்க மூன்று பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை 4.00 மணியளவில் தனது வீட்டிலிருந்து மாடு மேய்க்கும் தொழிலுக்கு சென்றிருந்த குறித்த நபர் ஆற்றுக்கருகில் சடலமாக மீட்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமையுடன் பிரதே பரிசோதனைக்காக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# தென்னாபிரிக்க அணிக்கெதிரான தொடருக்கு 22 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிப்பு

தென்னாபிரிக்க அணிக்கெதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடர்களுக்கான 22 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் முன்னாள் தலைவர் டினேஷ் சந்திமாலுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான தொடருக்குப் பின்னர் டினேஷ் சந்திமால் இலங்கை கிரிக்கெட் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கொவிட்-19 தொற்றுக்கு உள்ளாகியதால் தனிமைப்படுத்தப்பட்டிருந்த குசல் பெரேராவும் அணியில் இணைந்துள்ளார். முன்னதாக, இவர் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளைத் தவறவிட நேரிடும் என்று செய்திகள் வெளியாகியிருந்தமை கவனிக்கத்தக்கது. லஹிரு மதுங்க, மகேஷ் தீக்ஷன மற்றும் புலின தரங்க ஆகியோர் இலங்கை அணியில் புதுமுக வீரர்களாக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

தசுன் ஷானக தலைமையிலான அணி யில், தனஞ்சய டி சில்வா, குசல் பெரேரா, தினேஷ் சந்திமால், அவிஷ்க பெர் னாண்டோ, பானுக ராஜபக்ஷ, பத்தும் நிசங்க, சரித் அசலங்க, வனிந்து ஹசரங்க, கமிந்து மெண்டிஸ், மினோத் பானுக, ரமேஷ் மெண்டிஸ், சமிக கருணாரத்ன, நுவான் பிரதீப், பினுர பெர்னான்டோ, துஷ்மந்த சமீர, அகில தனஞ்சய, பிரவீன் ஜெயவிக்ரம, லஹிரு குமார, லஹிரு மதுங்க, புலின தரங்க, மகீஷ் தீக்ஷன ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கைக்கான கிரிக்கெட் தொடரில் தென்னாபிரிக்க அணி முதலில் மூன்று ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகளில் இலங்கை அணியோடு விளையாடுகிறது. செப்டெம்பர் 2 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை அனைத்துப் போட்டிகளும் கொழும்பில் உள்ள ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளன.




## அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் முதல் சுற்றுப் போட்டிகளின் முடிவுகள்

அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டியொன்றில் ஸ்பெயினின் ரொபர்டோ பாடிஸ்டா அகுட், ஆஸ்திரேலியாவின் நிக் கிர்கியோசை எதிர்கொண்டு 6-3, 6-4, 6-0 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில், ரஷ்யாவின் டேனில் மெட்வேடவ், பிரான்ஸின் ரிச்சர்ட் கேஸ்கெட்டை 6-4, 6-3, 6-1 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றார்.

பிரித்தானியாவின் அன்டி மரேயும், கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் சிட்ஸிபாசும் மோதிய போட்டியில் 2-6, 7-6, 3-6, 6-3, 6-4 என்ற செட்களில் சிட்ஸிபாஸ் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்குள் நுழைந்தார்.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டியில் ஜப்பானின் நவோமி ஒசாகாவும், செக்குடியரசின் மேரி பவுஸ்கோவாவும் மோதினர். இப்போட்டியில் ஜப்பானின் நவோமி ஒசாகா 6-4, 6-1 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதிபெற்றார். அமெரிக்காவின் கோகோ கோஃப், போலந்து வீராங்கனை மக்டா லினெட்டை எதிர்கொண்ட போட்டியில் 5-7, 6-3, 6-4 செட்களில் கோகோ கோஃப் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தார்.

## டோக்கியோ பாரா ஒலிம்பிக்கில் இலங்கைக்கு ஒரேநாளில் தங்கம் உள்பட இரண்டு பதக்கங்கள்




டோக்கியோ பாரா ஒலிம்பிக்கில் ஒரு தங்கம், ஒரு வெண்கலம் என ஒரேநாளில் இரண்டு பதக்கங்களை வென்று இலங்கை வீரர்கள் சாதனை படைத்துள்ளனர். இந்த இரண்டு பதக்கங்களும் ஈட்டி எறிதல் போட்டிகளில் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் தினேஷ் பிரியந்த ஹேரத் எப். 46 பிரிவில் தங்கப் பதக்கத்தையும், சமித்த துலான் எப் 64 பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

67.79 மீற்றர் தூரத்துக்கு ஈட்டியை எறிந்து புதிய உலக சாதனையுடன் தினேஷ் பிரியந்த ஹேரத் தங்கப் பதக்கத்தை வென்றிருந்தார். பாரா ஒலிம்பிக் வரலாற்றில் இலங்கைக்குக் கிடைத்த முதலாவது தங்கப்பதக்கம் இதுவாகும். இந்தியாவின் தேவேந்திர ஜஜாரியா 2016 ரியோ ஒலிம்பிக்கில் நிகழ்த்திய 63.97 மீற்றர் உலக சாதனையை நான்கு மீற்றரால் தினேஷ் முறியடித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைக்கான இரண்டாவது பதக்கத்தை சமித்த துலான் கொடிதுவக்கு பெற்றுக்கொடுத்தார். நேற்று மாலை நடைபெற்றது எப் 64 பிரிவு ஈட்டியெறிதல் போட்டியில் இலங்கை சார்பில் சமித்த துலானும், சம்பத் ஹெட்டியாரச்சியும் பங்குபற்றியிருந்தனர். எப் 42, எப் 44, எப் 63, எப் 64 ஆகிய நான்கு வகையான உடல் குறைபாடுகளை உடைய பிரிவுகளைச் சேர்ந்த 9 வீரர்கள் எப் 64 பிரிவுக்கான போட்டியில் இடம்பெற்றிருந்தனர். இந்த நான்கு பிரிவுகளுக்குமான வீரர்கள் ஒரு தங்கப் பதக்கத்துக்காகப் போட்டியிட்டபோதிலும், அவர்கள் புரியும் சாதனைகள் நான்கு பிரிவுகளுக்கும் வெவ்வேறாக பதிவுசெய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

65.61 மீற்றர் அதிகபட்ச தூரத்தைப் பதிவு செய்த சமித்த துலான் வெண்கலப் பதக்கத்தை வென்றெடுத்தார். இவருக்கு வெள்ளிப் பதக்கம் வெல்லும் வாய்ப்பு ஐந்தாவது எறிதல்வரை இருந்தபோதிலும் ஆறாவது முயற்சியில் 66.29 மீற்றர் தூரத்தை எட்டிய ஆஸ்திரேலிய வீரர் புரியன் மைக்கலால் அந்தச் சந்தர்ப்பம் நழுவியிருந்தது. இந்தப் போட்டியில் இந்தியாவின் சந்தீப் சுமித் 68.55 மீற்றர் தூரத்துக்கு ஈட்டியை எறிந்து எப் 64 பிரிவுக்கான உலக சாதனையுடன் தங்கப் பதக்கத்தை வென்றெடுத்தார். அவர் மேற்கொண்ட 3 முயற்சிகளிலும், அவரது சொந்த உலக சாதனையை அவர் முறியடித்திருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

இப்போட்டியில் பங்குபற்றிய மற்றொரு இலங்கையரான சம்பத் ஹெட்டியாரச்சி தனது முதல் 3 முயற்சிகளிலும் 50 மீற்றரை எட்டத் தவறியதால் தொடர்ந்து போட்டியிடும் தகுதியை இழந்தார்.



## காயம் காரணமாக ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகினார் வாஷிங்டன் சுந்தர்

விரலில் ஏற்பட்டுள்ள காயம் இன்னமும் பூரணமாகக் குணமடையாத காரணத்தினால் ஐ.பி.எல்லின் இரண்டாம் பகுதியில் விளையாடவுள்ள பெங்களூர் ரோயல் சலஞ்ஜர்ஸ் அணியில் இருந்து வாஷிங்டன் சுந்தர் விலக நேர்ந்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான தமிழகத்தைச் சேர்ந்த வாஷிங்டன் சுந்தர், அண்மைய காலங்களில் சிறப்பாக விளையாடி தேசிய அணியில் தொடர்ச்சியான இடத்தைத் தக்கவைத்துக்கொண்டிருந்தார். இந்திய ரி-20 அணியில் முக்கிய இடம்பிடித்த இவர், 2019 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இந்தியாவுக்காக அறிமுக வீரராகக் களமிறங்கியிருந்தார். அந்தத் தொடரில் சிறப்பாக விளையாடி தேர்வாளர்கள் மற்றும் அணித் தலைவர் கோலியின் நம்பிக்கையைப் பெற்ற அவர் இப்போது இங்கிலாந்து சென்றுள்ள இந்திய டெஸ்ட் அணியிலும் இடம்பிடித்திருந்தார்.

ஆனால், இங்கிலாந்தில் நடைபெற்ற பயிற்சிப் போட்டியின்போது விரலில் காயம் ஏற்பட்டதால் அவரால் தொடர்ந்து அணியில் நீடிக்க முடியாமல் போனது. தொடர் ஆரம்பமாவதற்கு முன்னரே நாடு திரும்பிய அவர், காயத்திலிருந்து குணமடைந்து தனது ரோயல் சலஞ்ஜர்ஸ் அணிக்காக விளையாடுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆயினும், காயம் இன்னும் குணமடையாததால் ஐ.பி.எல். போட்டிகளிலும் வாஷிங்டன் சுந்தர் பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்குப் பதிலாக அணியில் ஆகாஷ் தீப் என்ற பந்துவீச்சாளர் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டிலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப மாற்று நடவடிக்கை தேவை

## இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்து

பொருள்களின் விலைவாசி அதிகரிப்பு, மக்களை மோசமான நிலைமைக்கு கொண்டு சென்றுள்ளது. ஆகவே மாற்று நடவடிக்கை எடுக்காவிட்டால் மக்களின் வாழ்வாதாரம் மேலும் பாதிக்கப்படும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் வேலுசாமி இராதாகிருஷ்ணன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு நாடு முழுமையாக முடக்கப்பட்டுள்ளது.

இதனால் அன்றாடம் கூலி தொழில் செய்யும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த காலத்தில் 5 ஆயிரம் ரூபா 53 லட்சம் பேருக்கு வழங்கப்பட்ட போதிலும், அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, இம்முறை 17 லட்சம் பேருக்கே 2 ஆயிரம் ரூபா வழங்க நேர்ந்துள்ளது.

மேலும், தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த 2 ஆயிரம் ரூபா முறையாக அவர்களின் கைகளுக்கு கிடைப்பதில்லை. இது தொடர்பாக பல முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆகவே இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன், நாட்டில் பொருள்களின் விலைவாசி ஆகாயத்தை தொடுகின்ற சூழ்நிலையில் உள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாகவும் விலைவாசி அதிகரிப்பு காரணமாகவும் மக்கள் மிகவும் மோசமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எதிர்வரும் காலங்களில் இதற்கு மாற்று நடவடிக்கை எடுக்காவிட்டால் மக்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தொற்றாளர்களால் நிரம்பிவழியும் யாழ். போதனா வைத்தியசாலை

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றைய (திங்கட்கிழமை) நிலைவரப்படி, கொரோனாவைரஸ்தொற்றால் பாதிக்கப்பட்ட 129 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் 10 பேர், அதி தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் மருத்துவக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையால், வைத்தியசாலைகளிலும் இட ஒதுக்கீடு முழுமையடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை, பருத்தித்துறை மற்றும் சாவகச்சேரி வைத்தியசாலைகளிலும் கொரோனா சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டு, மருத்துவ சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் கண்காணிக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 129 கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், குறித்த வைத்தியசாலையிலுள்ள 2 அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளில் 10 நோயாளிகள் தீவிர மருத்துவக் கண்காணிப்பில் சிகிச்சை பெறுகின்றனர்.

கொரோனா நோயாளிகளின் உயிரிழப்பு அதிகரித்துள்ள நிலையில் தினமும் 5 சடலங்கள் போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் சீரான ஒழுங்கமைப்பில் தினமும் கொரோனா நோயால் உயிரிழந்தோரின் சடலங்கள், கோம்பையன் மணல் மயானத்தில் சுகாதார விதிமுறைகளின் கீழ் எரியூட்டப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது.



# யாழில் குறைந்த வருமானம் பெறுகின்ற இரு குடும்பங்களுக்கு வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணத்தில் குறைந்த வருமானத்தினைப்பெறும்இருகுடும்பங்களுக்குஇராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்ட இரு வீடுகள் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் கொடித்துவக்கினுடைய மேற்பார்வையின் கீழ் யாழ்.பாதுகாப்புப் படை வீரர்களின் சரீர ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம்- கோவளக்கலட்டி மற்றும் உடுவில் தெற்கு பிரதேசங்களில் வாழ்கின்ற குறைந்த வருமானத்தினைப் பெறும் இரு குடும்பங்களுக்கே இந்த வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

புத்தசாசன மற்றும் பௌத்த கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் வீடமைப்பு அதிகாரசபையின் பூரண நிதியனுசரணையில் இந்த இரு வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் 51ஆவது காலாட் படைப்பிரிவின் தளபதி, 511, 513 மற்றும் 515 ஆவது காலாட் படைப் பிரிவுகளின் படைத்தளபதிகள், இராணுவ உயரதிகாரிகள், அரச அதிகாரிகள், இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உண்மையை கண்டறியும்வரை தொடர்ந்து பயணிப்போம் தீபம் ஏற்றி காணாமற்போனோர் உறவுகள் கவனவீர்ப்பு

'உண்மையை கண்டறியும் வரை தொடர்ந்து பயணிப்போம்' என்ற வாசகத்தை முன்னிறுத்தி தீபம் ஏற்றி கவனவீர்ப்பு ஒன்றை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்தினர் முன்னெடுத்திருந்தனர்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தினை முன்னிட்டு, யுத்த காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் முப்படையினரால் கடத்தப்பட்ட, கையளிக்கப்பட்ட உறவுகளின் நீதியை வலியுறுத்தி, நேற்று (திங்கட்கிழமை) இரவு மன்னார் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் இணைந்து மன்னாரில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் தீபம் ஏற்றி கவனவீர்ப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள முடக்க நிலை காரணமாக வீடுகளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டியும், காணா மல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்கு விரைவில் இந்த அரசாங்கம் பதில் வழங்க வேண்டும் என வலியுறுத்தியும் வீடுகளில் தீபம் ஏற்றி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்தினர் கவனவீர்ப்பு நிகழ்வை முன்னெடுத்தனர். மேலும், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் சர்வதேசம் தலையிட்டு, யுத்த காலப்பகுதியிலும் அதற்கு முன்னரும் இலங்கை அரசாங்கத்தால் கடத்தப்பட்ட மற்றும் சரணடைந்த தங்கள் உறவுகளுக்கு நியாயத்தை பெற்றுத்தர வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# டொலரின் பெறுமதி மீண்டும் எகிறியது!

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சியை சந்தித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் படி இந்த விடயம் தெரியவந்துள்ளது.

அதன்படி அமெரிக்க டொலரொன்றின் விற்பனை விலை 204.89 ரூபாவாக அதிகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கைக்கு 78 கோடி அமெரிக்க டொலர் கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த விடயத்தை திறைசேரி செயலாளர் அறிக்கை ஒன்றின் ஊடாக தெரியப்படுத்தியுள்ளார்.

மேலும், சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் நாட்டுக்கு 30 கோடி அமெரிக்க டொலர் கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பிழையான நிதிக்கொள்கைகளால் மக்கள் மிகக்கடுமையாகப் பாதிப்பு!

## பாக்கீர் மாக்கார் காட்டம்

அரசாங்கத்தின் பிழையான நிதிக்கொள்கைகளால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சீனி விலை அதிகரிப்பு தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சீனி விலை அதிகரிப்பிற்கான பிரதான ஏதுவாக துறைமுகத்தில் சீனி கொள்கலன்கள் தேங்கிக் கிடக்கின்றன என பிரதான செய்தித்தாள்கள் அறிக்கையிட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

சீனி விலையேற்றம் கொவிட் பெருந்தொற்று நிலைமையால் ஏற்பட்டது கிடையாது, இது அரசாங்கத்தின் பிழையான நிதிக் கொள்கைகளாலும், தவறான நிதி முகாமைத்துவத்தாலும் ஏற்பட்டது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறான அரசாங்கத்தின் தவறுகளால் இன்று நாட்டு மக்கள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர் என இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

# திருநெல்வேலியில் பயணத்தடையை மீறி வர்த்தகத்தில் ஈடுபட்டோர் விரட்டியடிப்பு!

## கோப்பாய் பொலிஸார் அதிரடி

யாழ்ப்பாணம்- கோப்பாய், திருநெல்வேலி சிவன் அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் பயணத்தடையை மீறி மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள், கோப்பாய் பொலிஸாரால் இன்று (செவ்வாய்க்கிழமை) விரட்டப்பட்டனர்.

மேற்படி பகுதியில் மரக்கறி வியாபாரிகள் ஒன்றுகூடி விற்பனையில் ஈடுபடுவதால், அதிகளவான மக்கள் ஒன்று கூடி மரக்கறிகளைக் கொள்வனவு செய்யும் நிலைமை காணப்படுவதாக கோப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைய, அந்த இடத்தில் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார், வியாபாரத்தில் ஈடுபட்டவர்களை அந்த இடத்திலிருந்து விரட்டியுள்ளனர்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.08.2021இல் வெளியிடப்பெற்றது.